சுருக்கம்

காஞ்சிபுரம் மாவட்டம் – புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் – ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி – மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் அமைக்க புல எண்.335/28–ல் அடங்கிய அன்னை இந்திரா நகர் பூங்கா அமைந்துள்ள இடத்தில் 0.37.0 ஏர்ஸ் நிலத்தினை சுகாதார துறைக்கு நிலமாற்றம் செய்ய அரசு ஆணையிடுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–4) துறை

அரசாணை(நிலை) எண்.92 நாள்: 2.09.2010

படிக்கப்பட்டவை.

1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.2732/09/உ.இ (ஊ) அ3, நாள் 20.10.2009.
2. அரசாணை (நிலை) எண்.378 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (EAP-II (2) துறை, நாள் 12.11.2008.
3. அரசாணை (நிலை) 209 ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 17.08.2000.
4. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.35223/09/பரா.அ3–1, நாள் 23.12.2009.

-----

ஆணை:

காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்ட புல எண்.335/28–ல் அடங்கிய அன்னை இந்திரா நகர் பூங்கா அமைந்துள்ள இடத்தில் 0.37.0 ஏர்ஸ் நிலம் புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய ஆணையரின் பெயரில் பட்டா நிலமாகவுள்ளதால் மேற்படி நிலத்தினை சுகாதார துறைக்கு நிலமாற்றம் செய்யக்கோரி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு வரப்பெற்றுள்ளது என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மாற்றி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்ட தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டு விட்டதாகவும், ஆனால் ஆரம்ப சுகாதாரம் நிலையம் கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடம் புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றிய ஆணையரின் பெயரில் பட்டா நிலமாகவுள்ளதால் மேற்படி நிலத்தினை சுகாதார துறைக்கு நிலமாற்றம் செய்யப்படவில்லை எனவும், மேற்படி புல எண்ணில் அடங்கியுள்ள ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான நிலத்தை சுகாதாரத் துறைக்கு

நிலமாற்றம் செய்ய புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் தீர்மான எண்.313 நாள் 21.08.2009–ல் ஒப்புதல் அளித்துள்ளது என்றும், சுகாதார துறைக்கு நிலமாற்றம் செய்யக் கோரும் நிலத்தின் மதிப்பு வழிகாட்டி பதிவேட்டின்படி ஒரு சதுர அடி ரூ.2,618/– ஆக உள்ளதால் 0.37.0 ஏர்ஸ் நிலத்தின் மொத்த மதிப்பு ரூ.10,42,67,086/– எனவும் தெரிவித்துள்ளார்.

3. நிலமாற்றம் செய்யக் கோரும் நிலத்தின் மதிப்பு ரூ.50,000/–க்கு மேல் இருக்கும் பட்சத்தில் அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்து மாற்றம் மற்றும் ஆர்ஜிதம்) விதிகள், 2000–ன் விதி 5(1)–ல் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியில் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் அமைக்க புல எண்.335/28–ல் அடங்கிய அன்னை இந்திரா நகர் பூங்கா அமைந்துள்ள இடத்தில் 0.37.0 ஏர்ஸ் நிலத்தினை சுகாதார துறைக்கு நிலமாற்றம் செய்ய உரிய உத்தரவினை வழங்குமாறு நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரது கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் (அசையா சொத்து மாற்றம் மற்றும் ஆர்ஜீதம்) விதிகள், 2000–ன் விதி 5(1)–ன்படி காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சியில் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் அமைக்க புல எண்.335/28–ல் அடங்கிய அன்னை இந்திரா நகர் பூங்கா அமைந்துள்ள இடத்தில் 0.37.0 ஏர்ஸ் நிலத்தினை சுகாதார துறைக்கு நிலமாற்றம் செய்ய அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர்,
சென்னை – 15.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம்.

<u>நகல்</u>:-
மக்கள் நலம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9.
வருவாய்த் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.